# விமான, ஷெல் தாக்குதல்கள் தொடரும்!

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் மீது நடாத்தப்படுவரும் விமானத்தாக்குதலோ அல்லது ஷெல் தாக்குதல்களோ இராணுவம் தற்போது நிறுத்த மாட்டாது இவ்வாறு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். குடாநாட்டின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் விமானத்தாக்குதல்கள், ஆட்லறிஷெல் தாக்குதல்கள், கனரக ஆயுத தாக்குதல்கள் எதையும் நிறுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அரசுக்கு தற்போது இல்லையென்றும் அத்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 23 இதழ் 295
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-12-1993

## வெள்ளம், புயல்காற்றினால் 82 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் புயல் காற்றினால் 82 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், வெள்ளத்தினாலும், காற்றினாலும் மொத்தம் 18 ஆயிரத்து 392 குடும்பங்களைச் சேர்ந்த 81 ஆயிரத்து 851 பேர் பாதிப்படைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (வி-ரி)

# சபாநாயகர் - அரச எம். பி.க்கள்

# கருத்து மோதல்கள் அதிகரிப்பு!

## முகம்மதுவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவுக்கும், அரசதரப்பு எம். பி.க்களுக்கும் இடையில் கடந்த சில நாட்களாகக் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் தாம் அளிக்கும் தீர்ப்புகளில் அரச தரப்பு எம். பி க்களுக்கு நம்பிக்கை இல்லாவிடில் அவர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேறு வழியினை நாடலாம் எனச் சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமக்கு எதிராக அரச தரப்பு எம். பி.க்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரலாம் எனச் சபாநாயகர் கருதுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த சில நாட்களில் போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸ், அரச தரப்பு எம். பி. காமினி ஒபேசேகர ஆகியோருடன் சபாநாயகருக்குக் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டதுடன் அவர்களுடன் நாடாளுமன்றத்தில் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள் தடையை நீக்க அரச அதிபர் கோரிக்கை இராணுவம் நிராகரிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்குமாறு, யாழ். அரச அதிபர் திரு க.மாணிக்கவாசகர் விடுத்த வேண்டுகோளை இராணுவத் தலைமைப்பீடம் நிராகரித்துவிட்டது.

யாழ். குடாநாட்டுக்குப் போக்குவரத்தின் மூலம் உணவுப் பொருட்களைக் கொண்டுவருவதற்கு இராணுவம் விதித்துள்ள கட்டுப்பாடுகளைத் தற்போதைய சூழ்நிலை காரணமாக நீக்கமுடியாது என்று இராணுவம் தெரிவித்துள்ளதை, பாதுகாப்பு அமைச்சும் உறுதிப்படுத்தி இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-ரி

## தெற்கில் அதிகாலை நிலநடுக்கம் நால்வர் பலி; பலர் காயம்

### கொழும்பு உட்படப் பல பகுதிகள் பாதிப்பு

(கொழும்பு)

நேற்று அதிகாலை 2-42 மணியளவில் இலங்கையின் தென்பகுதியிலும் மலையகத்திலும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் நான்கு பேர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். நிலநடுக்கம் ஏற்பட்ட பலபகுதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

கொழும்பு, கண்டி, களுத்துறை, குருநாகல், காலி, மாத்தறை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டன. சுமார் இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் வரை இந்த நிலநடுக்கம் நீடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்டபோது பொதுஹர என்ற இடத்தில் ஒரு வீட்டின் சுவர்கள் இடிந்து விழுந்ததால் மூவர் பலியானார்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாபர் மசூதி தகர்ப்பு விவகாரம்: அத்வானி மற்றும் நான்கு பி.ஜே.பி. உறுப்பினர் கைது

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல். கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, கல்யாண்சிங் உட்பட ஐவர் நேற்றுக் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்த வருடம் அயோத்தி நகரில் பள்ளிவாசலைத் தகர்த்தெறிவதற்குச் சூத்திரதாரிகளாக இருந்த இவர்களைக் கைது செய்யும்படி, வட இந்தியாவிலுள்ள லக்னோ உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சிறையில் அடைக்கப்பட்ட இந்த ஐவரும் பிணையில் செல்வதற்கும் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது

இச்செயலைக் கண்டிக்கும் முகமாக உத்தரப் பிரதேசத்தில் பொது வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு பி. ஜே பி. அழைப்பு விடுத்துள்ளதை அடுத்து இராணுவமும், பொலிஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். வி-ரி

## சுவிஸில் தமிழ் அகதிகள் தங்க தடுப்பு முகாம் அமைப்பு

### எதிர்ப்புத் தெரிவித்து மறியல்

(லண்டன்)

சுவிஸ் நாட்டிலிருந்து இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்காக சூரிச் விமான நிலையத்தில் 182 மில்லியன் சுவிஸ்பிராங் செலவில் தடுப்புமுகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

சுவிஸ்நாட்டில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இலங்கை தமிழர்களை மூன்று மாதங்களுக்கு முன்பே இந்த முகாம்களில் தடுத்து வைத்து, பின்பு இலங்கைக்கு அனுப்பும் முகமாகவே மேற்படி முகாம்களை சுவிஸ் அரசு தற்போது அமைத்து வருகின்றது.

சுவிஸ் அரசின் இந்த மனிதாபிமானமற்ற முறையை கண்டித்து, இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுவரும் சூரிச் விமான நிலையத்தில் கடந்த வாரம் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களும் சுவிஸ்நாட்டு பிரஜைகளும் ஒன்றிணைந்து மாபெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தினர்கள். (வி-ரி)

## பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரச ஆலோசனை நடாத்திவருவதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சர் பிரேம் பெர்ணாண்டோ கொழும்பில் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களுக்கிடையில் கொழும்பில் இரண்டு நாள் தமிழில் நடைபெற்ற கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதி

(4-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூடு இருவர் காயம்

யாழ்ப்பாணம்

குப்பிளான், வசாவிளான் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர்

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி— பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி — பூநகரி படகுச் சேவை வழமை போல் இன்றும் நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது. (ஈ)

## விளம்பரம்

### விற்பனைக்கு

ஜே. ஸி. இன கலப்பின பசு மாடு ஒன்று விற்பனைக்குண்டு. பால் 12 போத்தலுக்கு மேல் கறக்கக்கூடியது. தொடர்பு: க. சிவராசா, No. 14/1, சுண்டுக்குளி, விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (சி-636)

## ராஜீவ் கொலை வழக்கு

# கலைஞர் கருணாநிதி

## கால அவகாசம் கேட்கிறார்

(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைபற்றி ஜெயின் கமிஷன் விசாரித்து வருகிறது. தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியையும் அக்கமிஷன் அழைத்திருந்தது. தனது தரப்பு வாதத்தை எடுத்துச் சொல்ல இரண்டு மாதகால அவகாசம் வேண்டும் என்று கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜீவ் கொலைக்கு புலிகள் மட்டும் காரணமா? அல்லது வெளிநாட்டு சதியும் இருக்கிறதா? என்பதை ஆராயவே ஜெயின் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வர்மா கமிஷன் ராஜீவ் கொலைபற்றி விசாரித்தது. பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாக இருந்திருந்தால் ராஜீவைக் காப்பாற்றியிருக்கலாம் என்ற கருத்துப்பட நீதிபதி வர்மா தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார்.

## கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருட்கள் கூடிய விலைக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்) பொருட்கள் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தால் கூடிய கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட (4ம் பக்கம் பார்க்க)

(4ம் பக்கம் பார்க்க)

## தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள்—1993

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தத்தம் துறைத் தலைவர்களுடன் தமது மாணவ பிரவேச அனுமதிச்சீட்டுடனும் உரிய பரீட்சைக் கட்டணத்துடனும் தொடர்புகொண்டு 1993-12-17ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்.

ச. ஜெயரத்தினம்
அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1993-12-07. (எ-3647)

---

உ
ஓம் சக்தி

### கோப்பாய் தெற்கு — அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மணவாளகோல விழா

# சங்காபிஷேகம்

அன்புடையீர்!

மேற்படி ஆலய வருடாந்த மணவாளகோல விழா கடந்த 28-11-93 முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வந்து இன்று (08-12-93 புதன் காலை 9-00 மணிக்கு) சங்காபிஷேகம். நல்லூர் சிவஸ்ரீ சு. மகாதேவா குருக்கள் ஐயா அவர்களாலும், பிரம்மஸ்ரீ சு. ஹரிஹரசர்மா குருக்கள் ஐயா அவர்களாலும் மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வைக்கப்படும்.

இத்துடன் விஷேட ஆசி உரைகள், அருளுரைகள் பக்தி பஜனைகள் மேளக்கச்சேரிகள் இடம்பெறும்.

அன்பர்கள் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருள்வேண்டி ஏகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

குறிப்பு:
ஆலயத்திற்கு வேண்டிய பொருளுதவி, பண உதவி செலுத்தியும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அன்பர்கள், உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பரிபாலன சபை

(சி-657)

### பருத்தித்துறையில் பொருட்களை இறக்கும் பணி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'வாதுவ, றுகுண' ஆகிய இரண்டு கப்பல்களிலிருந்தும் பொருட்களை இறக்கும் பணி நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது இரண்டு பாஜ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடக்கூடிய நிலையில் உள்ளமையினால் பொருட்களை இறக்குவதை விரைவுபடுத்த முடியாமல் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி குறிப்பிட்டார்.

அண்மையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் ஏனைய பாஜ்கள் சேவையில் ஈடுபடமுடியாத பாதிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வாதுவவில் இருந்து 1,400 மெற்றிக் தொன் மாவும் றுகுணவில் இருந்து உரவகைகளும் விதை உ. கிழங்கும் இறக்கப்படவுள்ளன. (158)

### தேக்கம் கிழங்குகள் இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியின் ஆலோசனையுடன் யாழ் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டினால் யாழ். வன இலாகாவினரால் தென்பகுதியில் இருந்து தேக்கம் கிழங்குகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இம்மழைக்காலத்துக்குள் விரைவுபடுத்தி இக்கிழங்குகளை நட்டுவிட வேண்டியுள்ளதால் இவைனப்பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப்பகுதியினிடமும், யாழ். மாவட்ட, செயலக அலுவலகங்களிலும் மற்றும் உதவிக் பிரிவுகள் மாவட்ட அலுவலகத்திலும் யாழ். வன இலாகாத் திணைக்களத்திலும் இவைனப்பெற்றுக்கொள்ளலாம்.

---

### 1வது ஆண்டு நினைவஞ்சலி — நினைவு கூருகிறோம்





சூசை அருளப்பு
மலர்வு: 04-06-1902
உதிர்வு: 08-12-1992

அருளப்பு மாகிறேற்
மலர்வு: 14-05-1914
உதிர்வு: 11-10-1971

என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசம் கொள்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். அவன் தீர்ப்புக்குள்ளாகாமல் சாவில் இருந்து வாழ்வுக்கு கடந்து சென்றுவிட்டார்கள்.

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகள் ஒழியாது எங்கள் உள்ளங்களில்.

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை என்றென்றும் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

859/3, கோயில் ஒழுங்கை,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். (எ-3649)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கு. மகேஸ்வரி (பூவா)

மலர்வு: 29-10-1949 உதிர்வு: 30-11-1991

திதி: அபரபக்க நவமி (8- 12- 1993)

ஈராண்டு சென்றாலும் இரு யுகந்தான் சென்றாலும் உயிருள்ள வரையெங்கள் உள்ளமது மறந்திடுமோ? சீராட்டிப் பாராட்டி சித்தைநிறைத் தன்புருச் சிந்துகின்ற கனிமொழியும் சிரிப்புதிரும் வதனமதும் அமைதியே நிழலாட அழுதழுது கண்ணீரால் அஞ்சலியே செலுத்துகின்றோம் ஆண்டிரண்டு நிறைவாக

கணவன்- குணரத்தினம் (ஸ்ரீ மௌனிக்)
பிள்ளைகள்: 1. அருள்குமரன் 2. யாமினி 3. தேமினி குடும்பத்தினர்.

இலைமயாணன்
யூனியனடி
வல்வெட்டித்துறை. (சி- 641)

---

## 8-வது வெற்றுப் போத்தல் பரிசுகுலுக்கல்

### போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1618 | 2917 | 3183 | 3525 |
| 1627 | 2925 | 3473 | 3540 |
| 1629 | 2935 | 3485 | 3550 |
| 1631 | 2944 | 3437 | 3602 |
| 1633 | 2946 | 3512 | 3603 |
| 1664 | 2947 | 3514 | 3605 |
| 1667 | 2948 | 3516 | 3608 |
| 2577 | 3167 | 3517 | 3621 |
| 2684 | 3169 | 3522 | 3627 |
| 2690 | 3180 | 3524 | 3628 |

9வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் 02 பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக்கொள்ளவும்.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD**
14, SEENIER LANE, JAFFNA.

(ஏ-3646)

**மணிவாசகம்**

புருவத்தின் சுருக்கங்களோவிட இதயத்தின் சுருக்கங்கள் அழிக்க முடியாதவை.

— மதாம் டாரதிதெறாஸ்

# நமது நோக்கு

**காமாலைக் கண்ணனுக்கு...!**

பூநகரிப் பகுதியிலுள்ள கடற்புலிகளின் கப்பல் படை முகாமைத் தாம் விமானக் குண்டு வீச்சினால் அழித்துவிட்டதாக இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

போர்க்காலப் பொய்களுக்கும் ஓர் எல்லை வேண்டாமோ?

வங்கிகள் பற்றியும், எயர்லங்கா நிறுவனம் பற்றியும், குருநாகல் இளைஞர் பொலிசாரால் கொல்லப்பட்டது பற்றியும் பொய்யான தகவல்கள் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்டதாக 'திவயின' பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

பாதிக்கப்படும் மக்களுக்கு 'நல்ல கதை' கூறி நகைச்சுவை விருந்தளித்திருக்கிறார்களா?

ஆக்கிரமிப்பு இராணுவம் படை முகாம்களிலேயே நிம்மதியாக இருக்க முடியாத நிலையைப் பூநகரி தோற்றுவித்துள்ளது. கடற்படையோ, நீருந்து விசைப்படகுகளை இழந்துவிட்ட நிலை.

இதேவேளை, விமானப் படையோ இருப்புக் கொள்ள முடியாமல் தத்தளிக்கும் நிலை உருவாகி வருவதாகச் செய்திகள் வருகின்றன.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் போர் விமானங்களை நிறுத்தினால், சர்வதேச விமானச் சேவைகளை நிறுத்திவிடப் போவதாக எச்சரிக்கை வந்துள்ளதாம்!

ஏற்கனவே, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் போர் விமானங்களை நிறுத்தக்கூடாது எனப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

எனவே, பலாலி, திருமலை சீனன்குடா ஆகிய இடங்களிலேயே போர் விமானங்களை நிறுத்தி வைக்க வேண்டிய அவசிய நிலை உருவாகி வருகிறது.

இந்த நிலையில், இருக்கும் இடத்தில் இருப்புக் கொள்ள முடியாத விமானங்கள் ஆகாயத்திலேயே பல மணி நேரங்கள் தங்கிவிடப் போகின்றனவா எனக் குண்டுத் தாக்குதலினால் கலங்கியிருக்கும் பொதுமக்கள் எண்ணுகிறார்கள்!

ஏற்கனவே, குருநகர்ப் பகுதியில் புலிகளின் கப்பற்படை இருப்பதாக விமானப்படை அதிகாரிகளுக்கு, பல அடிகள் மேலிருந்து பார்த்த கண்களுக்குத் தெரிந்திருக்கின்றது.

தேவாலயங்கள், சந்தைகள் போன்ற தெளிவாக அடையாளம் காணக் கூடிய இடங்களே பாரிய யுத்தக் கப்பல்களாகத் தெரிந்திருக்கிறது.

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தோன்றுமாம். விமானப்படையினருக்கு, காண்பதெல்லாம் கடற்புலி முகாம்களாகவும், கப்பல்களாகவும் தென்படுகின்றனவா?

# கிழக்கில் அட்டூழியங்கள் செய்த

## கப்டன் முனுஸைக் பூநகரியில் பலி

(கொழும்பு)

பூநகரி மோதலின் பின்பு, பூநகரிக்கு மீட்புப் பணிக்கு அனுப்பப்பட்ட விசேட படை அணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற கப்டன் முனுஸ் அங்கு புலிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் பலியானதாக இராணுவ வட்டாரங்கள் தற்போது தெரிவிக்கின்றன.

கப்டன் முனுஸ் கிழக்கு மாகாணத்தில் பல அட்டூழியங்களைச் செய்தவர். பல தமிழ் இளைஞர், யுவதிகளைச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றவர். கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் மர்மமான முறையில் காணாமல் போனதற்கும் இவரே முக்கிய காரணமாக இருந்தவர்.

கிழக்கு மாகாணத்தில் இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டும் முகமாக இராணுவத் தலைமைப்பீடம் இவரைக் கொழும்புக்கு அழைத்துப் பதக்கம் வழங்கி இதனுடன் கொழும்பில் தமிழர்களைக் கைது செய்யும் பொறுப்பையும் இவரிடமே இராணுவத் தலைமைப் பீடம் ஒப்படைத்தது.

திடீரென பூநகரி முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் பின்பு அங்கு சிக்குண்ட படையினரை மீட்டுக்கொண்டு வருவதற்கு கப்டன் முனுஸே சரியானவர் என்று இராணுவம் முடிவு செய்து இவரின் தலைமையிலேயே முதலாவது மீட்புப் படைப்பிரிவு பூநகரிக்கு அனுப்பப்பட்டது.

இவர் பூநகரிக்குச் சென்ற மறுநாளே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி பலியாகிவிட்டதாக இராணுவ தரப்பில் தற்போது கூறப்படுகின்றது. (வி-இ)

# பெருமளவு ராணுவத்தினர் வடக்கு நோக்கி நகர்வு

## பாரிய தாக்குதலுக்கு முஸ்தீபு

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'தவளை' பாய்ச்சல் அதிரடிக்கு பதிலடி கொடுக்கும் முகமாக பாதுகாப்பு அமைச்சின் இராணுவ நிபுணர்கள் புதியதிட்டம் ஒன்றை இரவு பகலாக ஒரே இடத்திலிருந்து தீட்டி வருவதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதி மீதான பாரிய தாக்குதலை இராணுவம் புது வருடத்துடன் ஆரம்பிக்கக் கூடும். இதற்காக பலாலி ஆனையிறவு, முல்லைத்தீவு, காங்கேசன்துறை ஆகிய இராணுவ முகாம்களைப் பலப்படுத்தும் முகமாக பல இராணுவப் பட்டாலியன்களை வடக்கு நோக்கி நகர்த்தி வருகின்றார்கள்.

இதேவேளை பூநகரி மோதலில் விடுதலைப் புலிகள் இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய மிக நவீன ஆயுதங்களை வடபகுதி மீது மேற்கொள்ள இருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையின்போது பயன்படுத்தி மற்றுமொரு பெரும் இழப்பைத் தமக்கு ஏற்படுத்தக்கூடும் என்றும் இராணுவம் அஞ்சுகின்றது.

இராணுவம் விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட ''யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையைக் காட்டிலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் மீது மேற்கொண்ட ''தவளைப் பாய்ச்சல்'' மிகவும் சக்தி வாய்ந்தது என்று இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். -வி-இ

# கிழக்கில் நிச்சயம் தேர்தல் நடக்குமாம்

(கொழும்பு)

''கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நிச்சயம் நடந்தே தீரும். தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளையும் தேர்தல் திணைக்களம் செய்து முடித்துவிட்டது'' இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா திருமலையில் நடந்த வைபவமொன்றில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடாத்துவதற்குப் போதிய அவகாசம் இன்மையினாலேயே தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கு விரைவில் சகஜநிலை ஏற்பட்டதும் நிச்சயமாகத் தேர்தல்கள் நடந்தே தீரும் என்று கூறினார். (வி-சி)

### யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

# மறியல் போராட்டம்

## நடாத்தப்போவதாக எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக சமூக சேவைப் பிரிவினர் யாழ். மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நாளை ஒன்பதாம் திகதி வியாழக்கிழமைக்கிடையில் வழங்காவிட்டால் 10-ம் வெள்ளிக்கிழமை சமூகசேவை பணியகத்துக்கு முன்னால் மறியல் போராட்டம் நடாத்தப்படுமென்று யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை எச்சரிக்கை செய்துள்ளது.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, சமூகசேவை உதவிப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மாணவர் உணவு முத்திரை, வறுமை நிவாரண முத்திரை வழங்கியதில் பல லட்சம் ரூபாய் வருமானம் சமூக சேவைப்பகுதியிடமிருந்து வர இருக்கின்றது. இதனால் சங்கங்களின் நாளாந்த செயல்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பணத்தை பெறுவதற்காக, ப.நோ.கூ. சங்கங்கள் பலதடவை மேற்படி பகுதியுடன் நேரடியாக தொடர்புகொண்டும் இதுவரை எதுவித பலனும் கிட்டவில்லை. ஆகவே இந்த கொடுப்பனவு அனைத்தையும் இம்மாதம் 9-ம் திகதிக்கு முன் பாக வழங்க வேண்டும். இல்லாவிட்டால் 10ம் திகதி வெள்ளிக்கிழமை சமூகசேவைப் பகுதி காரியாலயத்துக்கு முன்னால் மறியல் போராட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வி-இ

# புதிய நூல் நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமை புதிய நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட இருக்கிறது. கோப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. செ. குகதாசன் தலைமையில் இத்திறப்புவிழா நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலரும் விசேட ஆணையாளருமாகிய திரு. க. வேதீஸ்வரன் இந்நூல்நிலையத்தை திறந்துவைப்பார்.

**காட்டின் மரம் உயர**
**நாட்டின் தரம் உயரும்**

## பசுமை விவசாய சேவை நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளினதும், மற்றும் பொது மக்களினதும் நன்மை கருதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட செயலகத்தால் கோண்டாவில் சந்தி இருபாலை வீதியில் ''பசுமை விவசாய நிலையம்'' திறக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் விவசாயிகளுக்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரங்கள், கிருமிநாசினி, தெளிகருவி, பைப், மண்வெட்டிகள், உர வகைகள், விதைகள், கிருமிநாசினிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான மாக்கன்றுகள், தென்னங்கன்றுகள் போன்றன விநியோகம் செய்யப்படுகின்றன.

## இராசி பலன்

**08-12-1993**
**புதன்கிழமை**
**(தமிழுக்கு கார்த்திகை 24)**

தசமி: பி. இ. 1-40 வரை, அத்தம் பி. இ. 2-30 வரை, சித்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12-17 முதல் 1-47 வரை, சுபநேரம் மாலை 4-47 முதல் 6-17 வரை.

மேஷம்: வசதியான மாற்றம், திருமண யோகம், காரிய சித்தி.

இடபம்: தப்பபிப்பிராயம், மனவேதனை, குடும்ப தொல்லை.

மிதுனம்: வேண்டாத பிரச்சினை, தெய்வசிந்தனை, அச்சம்.

கடகம்: கடமையுணர்வு, கலைஞானம், இனிய உறவு.

சிம்மம்: பாரபட்சம் மானுர் கவலை, அநாவசிய செலவு.

கன்னி: போட்டியில் ஜெயித்தல், தொழில் சிறப்பு, பணவரவு.

துலாம்: முரட்டுப் பிடிவாதம், குடும்ப பிரிவு, மனக்கவலை.

விருச்சிகம்: நம்பிக்கைக் குறைவு, காரிய சித்தி, நண்பர் உபதேசம்.

தனுசு: தொழில் போட்டி, அடிமைநிலை, வீண் விரயம்.

மகரம்: கடும்சினம், மனைவியின் துன்பம், பணமுடை.

கும்பம்: வழித் தொல்லை, உடல் களைப்பு, அதிகாரிகள் சினம்.

மீனம்: தனியார் வீட்டில் சுபகாரியம், பாராட்டு.

—ஜோஸ்யர்.

### பூநகரியில்

# படையினரின் இழப்பு சரியாக தெரியவில்லை

(கொழும்பு)

பூநகரி மோதலில் பலியான இராணுவத்தினரின் சரியான எண்ணிக்கை இன்னும் இராணுவத் தலைமைப் பீடத்துக்கு தெரியாதிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி மோதலில் வீரச்சாவடைந்த புலிகளின் எண்ணிக்கையை விடுதலைப் புலிகள் சரியாக வெளியிட்டுள்ள போதிலும் இராணுவம் தமது தரப்பில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பை இன்னமும் சரியாக கணக்கிட முடியாதிருக்கிறது.

இராணுவம் கடைசியாக வெளியிட்ட அறிக்கையின் படி பூநகரி மோதலின் பின்பு 6 அதிகாரிகள் உட்பட 194 இராணுவத்தினரின் சடலங்களை மீட்டுள்ளதாகவும் 9 அதிகாரிகளையும் 428 இராணுவத்தினரையும் 200 கடற்படையினரையும் இன்னும் காணவில்லையென்றும் 16 அதிகாரிகள் உட்பட 419 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன. வி-இ-

### மட்டு அகதிகளுக்கு

# இரண்டு மாதங்களாக

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து இராணுவ நடவடிக்கையால் கொழும்பு அகதி முகாமில் தங்கியிருந்த தமிழ் அகதிகள் மீண்டும் மட்டக்களப்பு அகதி முகாம்களுக்குப் பலவந்தமாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களுக்குக் கடந்த இரு மாதகாலமாக எதுவித உலர் உணவு நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் நாவலடி அகதி முகாம்களுக்கும் பின்னர் வாழைச்சேனை அகதி முகாமிற்கும் அனுப்பப்பட்ட இவர்கள் போதிய நிவாரண வசதிகள் இன்றிப் பெரிதும் துன்பம் அனுபவித்து வருவதாகத் தெரியவருகிறது. (க)

மன்னார் மாவட்டத்தில்

# இராணுவம் வெளியேறிய பகுதிகளில் பெருமளவு கண்ணி, மிதி வெடிகள்

## மீளக் குடியமர்வு தாமதம்

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறை, கொண்டச்சி ஆகிய இராணுவ முகாமிலிருந்து வாபஸ் பெற்ற இராணுவத்தினர் தாம் வெளியேறும் போது வெளியேறிய பகுதிகளில் பெருமளவு நிலக்கண்ணி வெடிகளையும், மிதிவெடிகளையும், விதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் அப்பகுதிகளுக்கு மக்கள் சென்று மீளக்குடியமர விடுதலைப்புலிகள் அனுமதி மறுத்துள்ளனர். தற்போது இராணுவம் வெளியேறிய பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளையும் மிதிவெடிகளை யும் அகற்றும் பணியில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மடுமுகாமில் தங்கியிருந்த பெருமளவு தமிழ் மக்கள் மன்னார் பெரு நிலப் பரப்பிலிருந்து இராணுவம் வெளியேறிய ஏனைய பகுதிகளில் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர். (நி)

# குடிநீர் மாசடைகிறது பரிசோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாவனைக்குட்படுத்தப் படும் குடிநீரில் பக்றீரியாக்களும், இரசாயனப் பொருட்களும் சேர்ந்துள்ளதால் அவை பாவனைக்கு ஏற்றதல்லவென்று தெரிவிக்கப்படுகிறது.

பக்றீரியாக்களாலும் இரசாயனப் பொருட்களாலும் மாசடைந்துள்ள நீரைப் பரிசோதிப்பதற்கு தேவையான ஒழுங்குகளை தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

நீர் விநியோகத்திடம் இடம் பெயர்ந்தோர் முகாம்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் தனியார் மருத்துவ மனைகள் ஆகியன வற்றிற்கு இவ்வொழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் ஒழுங்குகள் தொடர்பான மேலதிக விபரங்களை பெற பருத்தித்துறை வீதியிலுள்ள பிராந்திய காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சி)

# இரண்டு லட்சம் பேருக்கு உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்த சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் அகதிகளுக்கு உலர் உணவு மற்றும் இருப்பிட வசதியை வழங்கி வருவதாக அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கிரமமாக அனுப்பப்படுவதாகவும் தெரிவித்தார். ஈ-நி

# கிளிநொச்சி, முல்லையில் தமிழீழ நீதிமன்றங்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் விரைவில் இயங்கவுள்ளன.

இதற்கான இறுதிச் செயல் திட்டங்கள் தற்போது பூர்த்தியாகும் நிலையிலுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திற்கான நீதிமன்றம் கிளிநொச்சியிலும் முல்லை.மாவட்டத்திற்கான நீதிமன்றம் புதுக்குடியிருப்பிலும் இயங்கவுள்ளன.

இம்மாத இறுதிப்பகுதிக்குள் இவை இயங்கவுள்ளதாக தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளுக்கும் விரைவில் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாக நீதி நிர்வாகத்துறையினர் மேலும் தெரிவித்தனர். (சி)

# அதிகாலையில் சுற்றிவளைப்பு நித்திரையானோர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பகுதியில் உள்ள தமிழ்க் கிராமங்கள், சிறிலங்கா இராணுவத்தினரால் அதிகாலை நேரத்தில் சுற்றிவளைக்கப்படுகிறது.

அதிகாலை நேரத்திலேயே அப்பகுதிகளைச் சுற்றிவளைக்கும் இராணுவத்தினர், வீடுகளுக்குள் நுழைந்து, நித்திரையில் இருக்கும் ஆண்களையும், பெண்களையும் கைது செய்து வருகின்றனர்.

வாழைச்சேனைக்கு அருகில் உள்ள பேத்தாழை, புதுக்குடியிருப்பு, பண்டிமடு, என்னம்புரம் ஆகிய கிராமங்களை அண்மையில் இவ்வாறு சுற்றிவளைத்த இராணுவத்தினர், வயது வேறுபாடின்றி இருபாலாரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் முகமூடி முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். முகம்மூடியால் இனம் காணப்பட்ட பெண்கள் உட்பட 12 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். -நி


## மலிவு விற்பனை

நத்தார் - புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு

1-12-1993 முதல் 31-12-1993 வரை

எமது நிலையத்தில் சகல விதமான புடவை வகைகளையும், தைத்த ஆடை வகைகளையும்

மலிவு விலையில் விசேட கழிவுடன்

பெற்றுக் கொள்ளலாமென வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

லண்டன் புடவை நிலையம்

249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(எ-3620)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10, 336/Bi

# பண்ருட்டி ராமச்சந்திரன் பா. ம. கட்சியிலிருந்து நீக்கம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து பண்ருட்டி ராமச்சந்திரன் நீக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் அடிப்படை உறுப்பினர் உரிமை உட்பட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் அவர் நீக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஈ-நி)

# முதன்மை ஆசிரியருக்கான 21 வெற்றிடங்கள்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்கள் இரண்டினுள்ளும் பணிபுரிவதற்கு பின்வரும் கோட்டங்களுக்குத் தேவையான முதன்மை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வலயங்களிலும் பின்வரும் பாடவாரியாக மொத்தம் 21 முதன்மை ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

ஆரம்ப கல்வி - வெற்றிடம் 2 பணிக்குரிய கோட்டங்கள்- மருதங்கேணி/பருத்தித்துறை1

ஆரம்ப கணிதம் / விஞ்ஞானம் - வெற்றிடங்கள் - 4. பணிக்குரிய கோட்டங்கள் - ஊர்காவற்றுறைகள் - ஊர்காவற்றுறை 1, சாவகச்சேரி 2, மருதங்கேணி 1.

ஆங்கிலம் - வெற்றிடங்கள் 8. பணிக்குரிய கோட்டங்கள்- நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை 1. யாழ்ப்பாணம் 1, நல்லூர் 1, சாவகச்சேரி 2, பருத்தித்துறை (உடுத்துறை) 1, தெல்லிப்பழை 1, சங்கானை (இளவாலை. பண்டத்தரிப்பு) 1.

விஞ்ஞானம் - வெற்றிடம் 1 பணிக்குரிய கோட்டம் - பருத்தித்துறை (உடுத்துறை) விவசாயம் - வெற்றிடம் 1 பணிக்குரிய கோட்டம் - நல்லூர். மனையியல் - வெற்றிடம் 1, பணிக்குரிய கோட்டம் (கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய்) நடனம் - வெற்றிடம் 2. பணிக்குரிய வலயங்கள் வலயம் 1, வலயம் 2.

ஹேமன் சுகிதேசலிக்கம் - வெற்றிடம் 1 பணிக்குரிய வலயம் - வலயம் 2.

மரவேலை - வெற்றிடம் 1. பணிக்குரிய வலயங்கள் - வலயம் 1, வலயம் 2.

விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 10ம் திகதிக்குமுன் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் பெயருக்கு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். -109

துப்பாக்கிச் சூடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து 1 மணிவரை புன்னாலைக் கட்டுவன், ஏழாலைப்பகுதிகளை நோக்கி ஷெல் மற்றும் துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதல்களை நடத்தினர்.

இச்சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவனில் இருவர் காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. —க

# அஹிம்சை வழி தோல்வியினாலேயே ஆயுதப்போராக மாறியது!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்கள் அஹிம்சை வழியில் நடத்திய போராட்டம் தோல்வி கண்டதால்தான் அது ஆயுதப் போராட்டமாக மாறியது.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி பஷீர் சேகுதாவூத் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் பேசிய ஜனாப் பஷீர் சேகுதாவூத் மேலும் கூறியதாவது:

வடக்கு கிழக்கு மக்களின் நிலைமைக்கு தோட்டத்தொழிலாளர்களையும் அரசுகொண்டு செல்லக்கூடாது.

அவர்களது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என்றார். (இ)

கப்பலில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விலையில் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதை பொது நிர்வாக கணக்குப் பகுதியினர் கண்டு பிடித்துள்ளனர். இதனையடுத்து மேற்படி பொருட்களை விலை குறைத்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களுக்கு எல்லாச் செலவும் சேர்த்து ஒரு கிலோவிற்கு ரூபா 4/- தான் செலவு ஏற்படும் என்றும் குறைந்த செலவில் கொண்டு வரப்பட்ட பொருட்களை பாவனையாளர்களுக்குக் குறைந்த விலையில் விநியோகிக்க வேண்டிய ப. நோ. கூ. சங்கமொன்று தனது கொள்கைக்கு மாறாக கூடுதல் விலையில் பாவனையாளர்கட்கு மேற்படி பொருட்களை விநியோகித்து வருகின்றது என்றும் இதுதொடர்பாக பொது நிர்வாகப் பகுதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

விலை அதிகரித்து விற்கப்பட்ட பொருட்கள் இவைகளின் விபரம் வருமாறு:- மாறி பிஸ்கட், நைஸ் பிஸ்கட், சொக் கிறீம் பிஸ்கட், ஒரேஞ் கிறீம் பிஸ்கட், மல்லி, நற்சீரகம், சோம்பு, சர்க்கரை, சயிக்கிள் ரயர், சயிக்கிள் ரியூப்.

கிரிக்கெட்

## 50-வது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை- மே. இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று மொறட்டுவ டிரோன் பெர்னாண்டோ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது

இது இலங்கைக் கோஷ்டியின் 50-வது டெஸ்ட் போட்டியாகும். இலங்கை இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளது. இதில் 4 போட்டிகளில் வெற்றியும், 22 போட்டிகளில் தோல்வியும், 21 போட்டிகள் வெற்றி தோல்வியின்றியும், 2 போட்டிகள் முற்றாகவும் கைவிடப்பட்டது (வி)

விமான, ஷெல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேற்படி தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரும், சமயப் பெரியார்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் வலியுறுத்தியதுகுறிப்பிடத்தக்கது.(வி-நி)

தெற்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீரமுனெதா என்ற இடத்தில் இந்த நிலநடுக்கத்தினால் மற்றொரு வீடு இடிந்து விழுந்ததில் ஒருவர் பலியானார்

1891-ம் ஆண்டுக்கும் 1990-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இது மாதிரி நிலநடுக்கங்கள் 52 ஏற்பட்டதாக காலஅவதான நிலையத்தின் பிரதி இயக்குநர் என். ஏ. அமரதாச தெரிவித்துள்ளார்.

பென்சன் வவுச்சர்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள், நேற்றுக் கொழும்பில் இருந்த கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. வி-நி

பத்திரிகையாளர்களுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கலந்து கொண்ட அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் விரைவில் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளை எனது அமைச்சு மேற்கொண்டு தற்போது அரசின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வி-நி)

சபாநாயகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக்கட்சி எம். பி காலிங்க ஒபேசேகர சம்பந்தமான நடவடிக்கைகளை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியபோது, அந்த எம். பியைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுப்புறச் சுற்றாடல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சருமான டாக்டர் விமல் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட எம். பிக்குச் சார்பாகப் பதிலளித்திருப்பது சபாநாயகருக்கும் அரசதரப்பு எம். பிக்களுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் கருத்து வேறுபாடுகளையும், மோதல்களையும் எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. இ-நி